01.06.2023
O.S.No.171/2015

பி.வா.சா.1 திருமதி.சாவித்திரி த.பெ.தர்மாங்கதன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.1/2012 என்ற வழக்கை நான் எதற்காக தாக்கல் செய்திருந்தேன் என்றால் எனது பாட்டி சொத்தை எனது மாமா மற்றும் எனது தாயார் ஆகியோர்கள் எனக்கு எழுதி கொடுத்துள்ளதால் அதன்படி அந்த சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என கோரி இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தேன், அது எனக்கு சாதகமாக தீர்ப்பாகி இருந்தது. எனது தாயார் மற்றும் எனது மாமா ஆகியோர்கள் என்ன பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால் பத்திரம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை, அவர்கள் அனுபவித்து வந்த சொத்தை வாரிசு என்ற அடிப்படையில் எனக்கு பாத்தியப்பட்டது என அந்த வழக்கை தாக்கல் செய்திருந்தேன். அசல் வழக்கு எண்.1/2012 என்ற வழக்கானது எனது தாய் வழி பாட்டியான மோளபிச்சி மற்றும் எனது தாய்மாமன் சந்தனம் சேர்வை ஆகியோர்களுக்கு நான்மட்டும் தான் வாரிசு என விளம்புகை செய்யக் கோரி தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான்.

2. எனது தாய்வழி பாட்டி மற்றும் தாய்மாமன் ஆகியோர்களின் சொத்துக்கள் வாரிசு அடிப்படையில் எனக்கு சேரவேண்டியது என்பதால் வாரிசு சான்றிதழ் கோரி மேற்படி வழக்கை நான் தாக்கல் செய்திருந்தேன். மேற்படி வழக்கில் மொத்தம் 21 இலக்க சொத்துக்களை பொறுத்து பட்டா மாறுதல் செய்து தர வேண்டி நான் பரிகாரம் கோரியிருந்தேன் என்றால் சரிதான். மேற்படி 21 இலக்க சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் ஏதாவது அந்த வழக்கில் தாக்கல் செய்திருந்தேனா என்றால் தாக்கல் செய்திருந்தேன். VAO உட்பட அனைத்து அதிகாரிகளிடம் எழுதி வாங்கி அந்த ஆவணங்களை எல்லாம் வழக்கில் தாக்கல் செய்திருந்தேன். நான் கூறுவது போல் இந்த வழக்கில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் எனது உறவினர்கள் என்றால் அவர்கள் அனைவரும் எனது சமுகத்தை சார்ந்தவர்கள் என்பதால் எனது உறவினர்களாக கூட இருக்கலாம்.

3. வாதிகளின் தாயார் பெயர் மோளபிச்சி என்ற முத்தம்மாள் என்றால் சரிதான். மோளபிச்சி என்ற முத்தம்மாளின் கணவர் பெயர் மாலையம்பலம் என்றால் சரிதான். நான் அசல் வழக்கு எண்.1/2012 ல் எனது தாய்மாமன் சந்தானம் சேர்வை மற்றும் எனது தாய்வழி பாட்டி மோளபிச்சி ஆகியோர்களுக்கு நான்தான் வாரிசு என தீர்ப்பு பெற்றுள்ளதில் வாதிகளுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை, ஆனால் அந்த வழக்கில் வாதிகளின் சொத்துக்களையும் சேர்த்து எனது சொத்தாக நான் காட்டியுள்ளது சட்டப்படி செல்லதக்கதல்லது என்பதால் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. மேற்படி அசல் வழக்கு எண்.1/2012 ல் காட்டப்பட்டுள்ள 21 இலக்க சொத்துக்களில் இந்த வழக்கில் காட்டப்பட்டுள்ள 14 இலக்க சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.1/2012 லிலும் சரி இந்த வழக்கிலும் சரி தாவா சொத்துக்கள் எனக்கோ எனது முன்னோர்களுக்கோ பாத்தியப்பட்டது

என்பதை காண்பிப்பதற்கு முறையான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. வாதிகள் தாவா சொத்துக்கள் அனைத்தையும் அவர்களுக்கிடையே பாகபாத்தியம் செய்து கொண்டார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதிகளின் தாயார் மோளபிச்சி என்ற முத்தம்மாள் கிரயம் பெற்றதற்கான கிரய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல்செய்துள்ளார்கள் என்றால் நானோ, எனது தாய்மாமன் சந்தானம் சேர்வையோ, எனது தாய் வழி பாட்டி மோளபிச்சியோ தாவாசொத்துக்களை யாருக்கும் விற்பனை செய்யவில்லை. அசல் வழக்கு எண்.1/2012ல் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரியாமல் அந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.1/2012ல் காட்டப்பட்டுள்ள 21 இலக்க சொத்துக்களை பொறுத்து தீர்ப்பு பெற்றுள்ளதில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தான் 14 இலக்க சொத்துக்களை பொறுத்து அந்த தீர்ப்பு வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.